Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்கிழமை, மே 07, 2024 | இதழ் 24

# 11 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு 3-வது கட்ட தேர்தல்: 93 தொகுதியில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு குஜராத் காந்திநகரில் வாக்களித்தார் பிரதமர் மோடி

சென்னை, 07 மே 2024: நாடாளுமன்ற 3வது கட்ட தேர்தல் இன்று நடந்தது. இதில் 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 93 தொகுதிகளில் வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு துவங்கியது. மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத் காந்தி நகரில் உள்ள நிஷான் உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் பிரதமர் மோடி ஓட்டுப் போட்டார்.

நாடாளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடந்து வருகிறது. இதில் முதல்கட்ட தேர்தல் கடந்த மாதம் 19-ந் தேதியும், 2-வது கட்ட தேர்தல் 26-ந் தேதியும் நடந்தது. இரு கட்டங்களிலுமாக 190 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்து உள்ளது.

அடுத்ததாக 93 தொகுதிகளில் 3-வது கட்ட தேர்தல் இன்று காலை 7 மணிக்கு துவங்கியது.

குஜராத் (25 தொகுதிகள்), கர்நாடகா (14), மராட்டியம் (11), உத்தரபிரதேசம் (10), மத்திய பிரதேசம் (9), சத்தீஷ்கார் (7), பீகார் (5), அசாம் (4), மேற்கு வங்காளம் (4), கோவா (2), தத்ரா ஹவேலி டையூ டாமன் (2) என 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இன்று வாக்குப்பதிவு நடந்தது.

குஜராத் மாநிலத்தின் சூரத் தொகுதிக்கும் இன்று வாக்குப்பதிவு நடைபெற இருந்த நிலையில், பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட முகேஷ் தலால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

அதேநேரம் 2வது கட்ட தேர்தலில் மத்திய பிரதேசத்தின் பெதுல் தொகுதி பகுஜன் சமாஜ் வேட்பாளர் அசோக் பலாவி உயிரிழந்ததால் அந்த தொகுதிக்கான தேர்தல் 3-வது கட்டத்துக்கு தள்ளி வைக்கப்பட்டது. அந்த தொகுதியிலும் இன்று வாக்குப்பதிவு நடந்தது.



காலை 7 மணிக்கு தொடக்கிய தேர்தலில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.வாக்குப் பதிவு விறுவிறுப்புடன் நடந்து வருகிறது.

குஜராத் மாநிலம் அகமதாபாத் காந்தி நகர் தொகுதிக்குட்பட்ட ராணிப் பகுதி அருகே உள்ள நிஷான் உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் பிரதமர் மோடி தனது வாக்கினை செலுத்தினார்.

'நாடாளுமன்ற தேர்தலில் நான் வாக்களித்துவிட்டேன். நமது ஜனநாயகத்தை வலிமைப்படுத்த அனைவரும் வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்' என்று பிரதமர் மோடி கூறினார்.

அதே வாக்குச்சாவடியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் குடும்பத்துடன் வந்து வாக்களித்தார். இந்த காந்திநகர் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராக அமித்ஷா போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா மாநிலம் கலாபுர்கியில் உள்ள வாக்குச்சாவடியில் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வாக்களித்தார். முன்னாள் முதலமைச்சர்கள் எடியூரப்பா, ஜெகதீஷ் ஷட்டர், பசவராஜ் பொம்மை ஆகியோர் வாக்களித்தனர்.

குஜராத்தின் போர்பந்தரில் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்ட்வியா வாக்களித்தார். அகமதாபாத்தில் அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி வரிசையில் நின்று வாக்களித்தார். மத்திய பிரதேசத்தில் முன்னாள் முதலமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் வாக்களித்தார். தெற்கு கோவா நாடாளுமன் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் பல்லவி டெம்போ தனது குடும்பத்தினருடன் வாக்களித்தார். உத்தர பிரதேசத்தில் அகிலேஷ் யாதவ் குடும்பத்துடன் வாக்களித்தார்.

நடிகை ஜெனிலியா தனது கணவரும் நடிகருமான ரிதிஷ் தேஷ்முக் மற்றும் மாமியார் வைஷாலியுடன் மராட்டியத்தில் லதூர் தொகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

காலை 9 மணி நிலவரப்படி 10.57 சதவிகித வாக்குகள் பதிவாகின. காலை 11 மணி நிலவரப்படி 25.41 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக மேற்குவங்கத்தில் 32.82 சதவீதம் ஓட்டுப்பதிவாகியுள்ளது.

ஓட்டுப்பதிவு நிலவரம், அசாம் 45.88%, பீகார் 36.69%, சத்தீஸ்கர் 46.14%, கோவா 49.04%, குஜராத் 37.83%, கர்நாடகா 41.59%, மத்திய பிரதேசம் 44.67%, மகாராஷ்டிரா 31.55%, உத்தர பிரதேசம் 38.12%, டாமன், டையூ 39.94%, மேற்குவங்கம் 49.27%.

இன்றைய தேர்தலுக்காக அந்தந்த மாநில போலீசாருடன் துணை ராணுவமும் பாதுகாப்பு பணிக்காக களமிறக்கப்பட்டு இருந்தது. இதனால் வாக்குச்சாவடிகளில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பீகாரில் சுபாலில் உள்ள வாக்குச் சாவடியில் தேர்தல் பணியிலிருந்த தலைமை அதிகாரி சைலேந்திர குமார் மாரடைப்பால் உயிரிழந்தார்.

நாடாளுமன்ற தேர்தலின் 3ம் கட்டத் தேர்தல் இன்று காலை தொடங்கி நடைபெற்று வருகின்றது. இதில் பீகாரில் சுபாலில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தலைமை அதிகாரி ஒருவர் திடீரென மயங்கி விழுந்தார். உடனே அவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பரிசோதித்த டாக்டர்கள் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சைலேந்திர குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு பிரதேச பரிசோதனை செய்யப்பட்டது. அவருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டது.

3-வது கட்ட தேர்தல் நடைபெறும் 93 தொகுதிகளில் 1,300-க்கு மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் சுமார் 120 பேர் பெண்கள் அடங்குவர். இதில் மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, மன்சுக் மாண்டவியா, பர்சோத்தம் ரூபாலா, ஜோதிர் ஆதித்ய சிந்தியா, பிரகலாத் ஜோஷி, முன்னாள் முதல்-மந்திரிகள் திக்விஜய் சிங், சிவராஜ் சிங் சவுகான், பசவராஜ் பொம்மை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இதைப்போல சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ் யாதவின் மனைவி டிம்பிள், சரத்பவாரின் மகள் சுப்ரியா சுலே, அஜித் பவாரின் மனைவி சுனேத்ரா பவார் ஆகியோரின் அரசியல் எதிர்காலமும் இன்று முடிவு செய்யப்படுகிறது.

வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு நிறைவடைகிறது. இதன் பின் மின்னணு வாக்குப்பதிவு யந்திரங்கள் அனைத்தும் சீல் வைக்கப்பட்டு, வாக்கு எண்ணும் மையங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. அங்கு அடுத்த மாதம் (ஜூன்) 4-ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# நெல்லையில் ஜெயக்குமார் மர்ம மரணம்: காங்கிரஸ் எம்.எல்.ஏ.விடம் விசாரணை
## 2 கடிதங்களிலும் உள்ள கையெழுத்தை உறுதி செய்த தடய அறிவியல் நிபுணர்கள்




சென்னை, 07 மே 2024: நெல்லை காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் மரணம் தொடர்பாக காங்கிரஸ் எம்.எல்.ஏ.விடம் விசாரணை நடைபெற்றது.

நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் கே.பி.கே. ஜெயக்குமார் தனசிங் இறந்து 4 நாட்கள் ஆகிவிட்ட நிலையிலும், அவரது சாவு வழக்கில் இதுவரை உறுதியான ஒரு முடிவை எடுக்க முடியாமல் போலீசார் திணறி வருகின்றனர்.

பல்வேறு கோணங்களில் விசாரணையை நகர்த்தி வரும் சூழ்நிலையில் கொலையா? அல்லது தற்கொலையா? என்று உறுதியான முடிவுக்கு வரமுடியாமல் போலீசார் இருந்து வருகின்றனர்.

இதற்கிடையே ஜெயக்குமார் மர்மமான முறையில் உயிரிழந்துள்ள நிலையில் அவர் எழுதியதாக 2 கடிதங்கள் வெளிவந்தது. அதில் ஒன்று கடந்த 30-ந்தேதி நெல்லை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுக்கு எனவும், மற்றொரு கடிதம் 27 மற்றும் 30-ந்தேதி என குறிப்பிடப்பட்டு அவரது மருமகனுக்கும், குடும்பத்தாருக்கும் என்றும் எழுதியதாக வெளிவந்தது இந்த 2 கடிதங்களையும் அவர், தன் கைப்பட எழுதினாரா அவரது கையெழுத்து தானா என்று போலீசார் உறுதி படுத்துவதற்காக அதனை தடய அறிவியல் அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் அந்த கடிதத்தை ஆய்வு செய்த நிலையில், அவரது பழைய கடிதங்களில் உள்ள எழுத்துக்களை இந்த கடித்தில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்து அறிவியல் ரீதியாக ஆய்வு செய்தனர். அதில் 2 கடிதங்களையும் ஜெயக்குமார் தனது கைப்பட எழுதியுள்ளார் என்று தடய அறிவியல் அலுவலர்கள் உறுதி செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் இந்த வழக்கில் தொடர்ந்து மர்மம் நீடித்து வந்த நிலையில், விசாரணைக்காக 8 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. இதையடுத்து தனிப்படையினர் காங்கிரஸ் கட்சியினர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்கிடையில் காங்கிரஸ் தலைவர் மரண வழக்கில் விசாரணைக்கு ஆஜராகுமாறு எம்.எல்.ஏ. உள்பட 30 பேருக்கு போலீசார் நேற்று சம்மன் அனுப்பினர்.

இந்த நிலையில், நாங்குநேரி எம்.எல்.ஏ ரூபி மனோகரனிடம் காவல்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணையானது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து இன்னும் பல வி.ஐ.பி.க்கள் இந்த விசாரணை வளையத்திற்குள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஜெயக்குமார் மரண வழக்கில் புதிய தடயம் ஒன்று கிடைத்துள்ளதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிந்த நிலையில் கிடந்த ஜெயக்குமாரின் வாயில் பாத்திரங்களை துலக்கும் இரும்பு பிரஸ் ஒன்று இருந்தது. தற்போது போலீசார் ஜெயக்குமார் வீடு மற்றும் அவரது குடும்பத்தினரிடம் விசாரணை நடத்தி வரும் நிலையில் இரும்பு பிரசின் பிளாஸ்டிக் கவர் அவரது வீட்டின் உள்ளே உள்ள மாட்டுக்கொட்டகையில் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதனை கைரேகை நிபுணர்கள் உதவியுடன் போலீசார் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 4ஈருவது ஆண்டில் தி.மு.க. ஆட்சி நாடும் மாநிலமும் பயனுற
## எந்நாளும் உழைப்பேன்: முதல்வர் ஸ்டாலின் உறுதி



சென்னை, 07 மே 2024: நாடும் மாநிலமும் பயனுற எந்நாளும் உழைப்பேன் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உறுதி கூறியுள்ளார்.

இது சொல்லாட்சி அல்ல; செயலாட்சி என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி கடந்த 2021ம் ஆண்டு மே மாதம் 7ந்தேதி பதவி ஏற்றது. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று 3 ஆண்டுகள் நிறைவு பெற்று இன்று 4ம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது.

இந்நிலையில், திமுக ஆட்சி பெறுப்பேற்று 3 ஆண்டுகள் நிறைவடைந்ததை அடுத்து, சென்னை மெரினாவில் உள்ள அண்ணா மற்றும் கருணாநிதி நினைவிடத்தில் முதலமைச்சர் ஸ்டாலின்மரியாதை செலுத்தினார்.

அவருடன் தி.மு.க. பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன், தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள் எ.வ.வேலு, பொன்முடி, பி.கே.சேகர்பாபு, ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவுப் பெற்று நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி முதலமைச்சர் ஸ்டாலின் காணொலியில் பேசியதாவது:

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் - உங்கள் நல்லாதரவையும், நம்பிக்கையையும் பெற்று, நம்முடைய மாநிலத்திற்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவுப் பெற்று நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாள் மே- 7.

இந்த மூன்றாண்டு காலத்தில் நான் செய்து கொடுத்த சாதனைகள், - திட்டங்கள், - நன்மைகள் என்னென்ன என்பதை தினந்தோறும், பயனடைந்த மக்களின் முகங்களில் இருக்கும் மகிழ்ச்சியே சாட்சி.

திராவிட மாடல் அரசு செய்துகொடுத்த திட்டங்களை நான் சொல்வதைவிட, பயனடைந்த மக்கள் சொல்வது தான் உண்மையான பாராட்டு. (மகளிர் உரிமைத் திட்டம், சுய உதவிக் குழுவினருக்கான திட்டங்கள், தோழி விடுதி திட்டம், விடியல் பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சுய தொழில் புரிவதற்கான கடனுதவி திட்டம்,

நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், திருநங்கையர்களுக்கான நலத்திட்ட உதவிகள், குடும்ப தலைவிகளுக்கு புதிய ரேஷன் கார்டு, மாற்றுத் திறனாளிகளுக்கான் நலத்திட்ட உதவிகள் போன்ற திட்டங்கள் குறித்து மக்கள் தெரிவித்த பாராட்டுக்களை முதல்வர் தெரிவித்தார்.)

"ஸ்டாலின் என்றால் உழைப்பு - உழைப்பு - உழைப்பு!" என்று சொன்னார் எங்களையெல்லாம் உருவாக்கிய அன்புத்தலைவர் கலைஞர்.

இந்த மூன்றாண்டு காலத்தில் ஸ்டாலின் என்றால் செயல் - செயல் - செயல் என நிரூபித்துக் காட்டியுள்ளேன்!

எப்பொழுதும் நான் சொல்வது, இது எனது அரசு அல்ல. நமது அரசு. அந்த வகையில் நமது அரசு நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. நாடும் மாநிலமும் பயனுற எந்நாளும் நான் உழைப்பேன் என உறுதியேற்று ஆட்சிப் பயணத்தை உங்கள் வாழ்த்துகளுடன் தொடர்கிறேன். இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

# பத்திரப்பதிவு மூலம் பெறப்படும் வருவாயை 3 மடங்கு உயர்த்த
## தி.மு.க. அரசு திட்டம்: ஓ. பன்னீர்செல்வம் கண்டனம்



சென்னை, 07 மே 2024: பத்திரப்பதிவு மூலம் பெறப்படும் வருவாயினை மூன்று மடங்கு உயர்த்த திட்டமிட்டிருக்கும் தி.மு.க. அரசுக்கு ஓ. பன்னீர்செல்வம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்தே பொது மக்கள் மீது எப்படி எப்படியெல்லாம் வரி வசூலிக்கலாம் என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தி.மு.க. அரசின் இந்த மக்கள் விரோத குறிக்கோள் காரணமாக சொந்த வீடு வாங்கும் மக்களின் கனவு சிதைக்கப்பட்டுள்ளது. வழிகாட்டு மதிப்பீடு நியாயமாக நிர்ணயிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்துவிட்டு, அதனை உயர்த்திய தி.மு.க. அரசு, தற்போது அதனை மேலும் உயர்த்தும் வழிப்பறிக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

வெளிச்சந்தையில் சொத்துக்களின் மதிப்பு கணிசமாக அதிகரித்துள்ளதைக் காரணம் காட்டி, அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள குழு வழிகாட்டி மதிப்பு குறித்த பரிந்துரையை அளிக்கும் வரை, 8.6.-2017 வரை கடைபிடிக்கப்பட்டு வந்த வழிகாட்டி மதிப்பிற்கு ஈடாக பதிவுக்கட்டணத்தை தி.மு.க. அரசு உயர்த்தியது. இதன்படி, வழிகாட்டி மதிப்பு 33 விழுக்காடு உயர்த்தப்பட்டது. இதன் காரணமாக, வீடு வாங்குபவர்கள் கூடுதல் நிதிச்சுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

இந்த நிலையில், 2023ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பேசிக், பிரீமியம், அல்ட்ரா பிரீமியம் என மூன்று வகைகளாக வீடுகள் பிரிக்கப்பட்டு, மேலும் மூன்று மடங்கு நிதிச் சுமையை மக்கள்மீது திணிக்க தி.மு.க. அரசு முடிவு செய்தது.

இதற்கிடையில், அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் மற்றும் இதர வீடுகளுக்கு தெருவாரியாக கூட்டு மதிப்பினை நிர்ணயம் செய்தது தமிழ்நாடு அரசு. ஆனால், எந்தத் தெருவுக்கு எவ்வளவு வழிகாட்டி மதிப்பு என்பதை பதிவுத்துறை வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. மாறாக, வீட்டினை வாங்குபவர்கள் அல்லது கட்டுமான நிறுவனங்கள் அந்தத் தெருவுக்கு உள்ள வழிகாட்டி மதிப்பினை தொடர்புடைய சார் பதிவாளரிடம் நேரில் சென்று கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறு சார்பதிவாளரிடம் நேரில் சென்று வீடு வாங்குபவர்கள் அல்லது கட்டுமான நிறுவனங்கள் விசாரித்தபோது, 8.6.-2017 வரை கடைபிடிக்கப்பட்டு வந்த வழிகாட்டி மதிப்பை விட உயர்வாக இருந்தது தெரிய வந்தது. மேலும், இந்த வழிகாட்டி மதிப்பு என்பது அடுக்குமாடி குடியிருப்பின் மொத்த அளவுக்கு ஒரே பத்திரமாக பதிவு செய்யப்படுகிறது.

பிரிபடா பாகத்திற்கு தனிப்பத்திரம், அடுக்குமாடி குடியிருப்பின் அளவுக்கு தனிப்பத்திரம் என்ற நடைமுறை கைவிடப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக மக்கள் கூடுதல் சுமைக்கு தள்ளப்பட்டனர். இந்த முறை காரணமாக, வீடு வாங்கும் ஒவ்வொருவரும், வீட்டின் அளவை பொறுத்து, குறைந்தபட்சம் 2 லட்சம் ரூபாயிலிருந்து அதிகபட்சம் 10 லட்சம் ரூபாய் வரை கூடுதலாக முத்திரை மற்றும் பதிவுக் கட்டணம் கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வீட்டை வாங்குவது என்பது மிகவும் கடினமான ஒன்று. வங்கி, வங்கியாக அலைந்து திரிந்து, கடன் பெற்று, வீட்டை வாங்கி, அதற்கான உள் வேலைகளை செய்து, கடனுக்கு மாதாந்திர தவணை கட்டி மக்கள் அல்லலுற்று இருக்கின்ற நிலையில், முத்திரை மற்றும் பதிவுக்கட்டணத்தை அநியாயமாக, ஒரே ஆண்டில் இரண்டு மடங்கு உயர்த்தி இருப்பது என்பது கொடுமையிலும் கொடுமை. முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திற்கு தனிக்கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில், எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல, சந்தை மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்வதை சுட்டிக்காட்டி, தற்போதுள்ள பத்திரப் பதிவு வருவாயான சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாயினை 60 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தத் தேவையான நில வழிகாட்டி மதிப்புகளை பரிந்துரைக்குமாறு சார் பதிவாளர்களுக்கு அரசு உத்தர விட்டுள்ளதாக பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# இந்தியாமார்ட் இன்டெர்மெஷ் லிட். முழு ஆண்டு மற்றும் நான்காம்
## காலாண்டு, மார்ச் 31, 2024 வரை - முடிவுகள் செய்திக் குறிப்பு



சென்னை, 07 மே 2024: இந்தியாமார்ட் இன்டெர்மெஷ் லிட். ("இந்தியாமார்ட்" அல்லது "கம்பெனி" என குறிக்கப்படும்) முழு ஆண்டு மற்றும் நான்காம் காலாண்டு, மார்ச் 31, 2024 வரையிலான நிதி முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது.

இந்தியாமார்ட் ரூ.315 கோடி செயல்பாட்டு வருவாய் வெளியிட்டுள்ளது. இது, கடந்த காலாண்டு வருவாயான ரூ.269 கோடியுடன் ஒப்பிடுகையில் 17% வளர்ச்சியைக் குறிக்கும். இதில், இந்தியாமார்ட் இன் தனி வருவாயான ரூ.299 கோடியும் பிசி இன்ஃபோடெக் இன் வருவாயான ரூ.14 கோடியும் அடங்கும். இது முறையே 17% மற்றும் 24% நடப்பாண்டு வளர்ச்சியைக் குறிக்கும்.

நடப்பு காலாண்டில் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தொகை 16% வளர்ச்சி பெற்று ரூ.484 கோடியை எட்டியது. இதில், தனி வருவாயான ரூ.465 கோடியும், பிசி இன்ஃபோடெக் இன் வருவாயான ரூ.18 கோடியும் அடங்கும். இவை முறையே 16% மற்றும் 24% வளர்ச்சியைக் குறிக்கும்.

மார்ச் 31, 2024 வரையிலான ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,440 கோடியாக வளர்ச்சியுற்றது. இது, ஓராண்டின் மீதான 24% வளர்ச்சியைக் குறிக்கும். இதில், முக்கியமாக, இந்தியாமார்ட் இன் தனி ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,395 கோடி மற்றும் பிசி இன்ஃபோடெக் இன் ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.43 கோடி ஆகியவை அடங்கும் இது, முறையே ஓராண்டின் மீதான 23% மற்றும் 59% வளர்ச்சியைக் குறிக்கும்.

காலாண்டுக்கான நிகர லாபம் ரூ100 கோடியாகும். இது, 25% லாபத்தைக் குறிக்கும். காலாண்டுக்கான செயல்பாட்டு பணப்புழக்கம் ரூ.260 கோடியாகும். மார்ச் 31,2024 இல், ரொக்க மற்றும் முதலீட்டு இருப்பு ரூ.2,340 கோடியாக இருந்தது.

தனியான செயல்பாட்டு வருவாய் ரூ.299 கோடியாக வளர்ச்சியுற்றது. கடந்த ஆண்டில் இது ரூ.256 கோடியாக இருந்தது. இது 17% வளர்ச்சியைக் குறிக்கும். வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், செலுத்தும் சப்ளயர்கள் மூலமான 10% வளர்ச்சியும் 6% செலுத்தும் சப்ளையர்களின் எண்ணிக்கை வளர்ச்சியுமாகும்.

காலாண்டில், வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.465 கோடியாகவும் மார்ச் 31, 2024 வரையிலான ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,395 கோடியாகவும் வளர்ச்சியுற்றன. இது, ஓராண்டின் மீதான 23% வளர்ச்சியைக் குறிக்கும்.

காலாண்டில், இபிஐடிடிஏ ரூ.90 கோடியாக இருந்தது. இபிஐடிடிஏ யின் லாப அளவு 30% காலாண்டின் நிகரலாபம் ரூ.92 கோடியாகும். இதன் லாப அளவு 27%

நிதியாண்டு 2024 இன் நான்காம் காலாண்டில் இந்தியாமார்ட் 24 மில்லியன் தனித்துவமான தொழில் விசாரிப்புக்களைப் பெற்றது. இது ஓராண்டின் மீதான 14% வளர்ச்சியைக் குறிக்கும். சப்ளையர்களின் ஸ்டோர்முனைவுகள் 7.9 மில்லியனாக, வளர்ச்சியுற்றது. இது ஓராண்டின் மீதான 5% வளர்ச்சியைக் குறிக்கும். செலுத்தும் சப்ளையர்களின் எண்ணிக்கை 214கே ஆக வளர்ச்சியுற்றது. காலாண்டில் இது, நிகர 3கே வாடிக்கையாளர் சேர்ப்பை உள்ளடக்கும்.

செயல்பாடு குறித்து தலைமை நிர்வாக அதிகாரி, திரு.தினேஷ் அகர்வால் கீழ்க்கண்டவாறு கூறினார்:

நிதியாண்டில் வருவாய், ஒத்திவைக்கப்பட்ட வருவாய், லாபம் மற்றும் பணப்புழக்கத்தில் சீரான வளர்ச்சியை அடைந்துள்ளோம். சிறப்பான பொருள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றை அளிப்பதன் மூலம், தொழில்கள் மேலும் மேலும் ஆன்லைன் வளர்ச்சி பெறுவதை ஊக்குவிப்பதில் எங்கள் தனிக் கவனம் இருக்கும். திடமான செயல்பாட்டு பணப்புழக்கம், எமது மதிப்பூட்டலுக்கு மேலும் வலுசேர்க்க தொடர்ந்த முதலீடுகள் ஆகியவற்றின் மூலம், தொழில்களின் வளர்ந்து வரும் இணையதள பயன்பாட்டு வளர்ச்சியினூடே, தொடர்ந்த லாபகரமான வளர்ச்சியை எட்டுவோம் என நம்புகிறோம்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## மைக்ரான் அறக்கட்டளை மற்றும் ஹைதராபாத் யுனைடெட் வே ஆகியவை யுஆர்எளம் மூலம் கல்வியில் சிறந்து விளங்குவதற்கான உதவித்தொகையை வழங்குகிறது




திருச்சி, 07 மே 2024: மைக்ரான் அறக்கட்டளை, யுனைடெட் வே ஆஃப் ஹைதராபாத் உடன் இணைந்து, இந்தியாவின் முன்னணி பொறியியல் நிறுவனங்களில் உள்ள 60 சிறந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையை வழங்கி, அவர்களுக்கு கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் பிரகாசமான எதிர்காலத்திற்கும் வழிவகுத்தது. யுனிவர்சிட்டி ரிசர்ச் அலையன்ஸ் மைக்ரான் (யுஆர்எளம்) முன்முயற்சியின் ஒரு பகுதியாக வழங்கப்படும் இந்த உதவித்தொகைகள், ஒவ்வொரு மாணவரும் தங்கள் திறனைத் திறக்கவும், அவர்கள் தேர்ந்தெடுத்த படிப்புத் துறைகளைத் தொடரவும் மற்றும் நிறைவான வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கவும் ஒரு வாய்ப்பைப் பெற உதவுகின்றன.

மாணவர்களின் பி.டெக் (தொழில்நுட்ப இளங்கலை) மூன்றாம் செமஸ்டர் மற்றும் எம்.டெக் (தொழில்நுட்ப முதுநிலை) முதலாம் ஆண்டு, கணினி அறிவியல் பொறியியல், மின்னணுவியல் & மின் பொறியியல், மற்றும் மின்னணுவியல் & கணினி பொறியியல் ஆகிய துறைகளில் மாணவர்களை ஆதரிப்பதற்காக இந்த உதவித்தொகை குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 60 பயடைந்தவர்களில் , 16 பேர் பெண்கள், மற்றும் 10 பேர் மாற்றுத்திறனாளிகள் பிரிவின் ஒரு பகுதியாக உள்ளனர், இது மைக்ரானின் உள்ளடக்கத்திற்கான அர்ப்பணிப்பு மற்றும் புலமைப்பரிசில் திட்டத்தால் வளர்க்கப்பட்ட திறமையை இது பிரதிபலிக்கிறது.

இந்த மாணவர்கள் ஐஐடி டெல்லி, ஐஐஐடி பெங்களூர், ஐஐடி காந்திநகர், ஐஐடி ஹைதராபாத், பிட்ஸ் பிலானி, தேசிய தொழில்நுட்ப நிறுவனம் கர்நாடகா, சூரத்கல், இந்திரா காந்தி டெல்லி பெண்களுக்கான தொழில்நுட்ப பல்கலைக்கழகம், என் ஐ டி திருச்சி மற்றும் ஜெ என் டி யூ எச் பொறியியல் கல்லூரி உள்ளிட்ட இந்தியாவின் சில முன்னணி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். தேர்வுச் செயல்முறையில் விரிவான வளாகத்தில் செயல்படுத்துதல் மற்றும் நாடு முழுவதும் கல்லூரி பிரச்சாரங்கள் ஆகியவை அடங்கும், நாடு முழுவதும் உள்ள 494 நிறுவனங்களில் இருந்து 2,677 விண்ணப்பங்கள் வந்தன. யூ டபிள்யூ எச் ஆல் நடத்தப்பட்ட ஒரு நுணுக்கமான மறுஆய்வு செயல்முறையைத் தொடர்ந்து, முன் வரையறுக்கப்பட்ட தேர்வு அளவுகோல்கள் மற்றும் விரிவான தொழில்நுட்ப மதிப்பீட்டின் அடிப்படையில், 60 விதிவிலக்கான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தவர்களாக உருவெடுத்தனர், ஒவ்வொருவரும் அந்தந்த துறைகளில் சிறந்த தகுதி மற்றும் வாக்குறுதியை வெளிப்படுத்தினர். ஒரு மாணவருக்கு ரூ.80,000 மதிப்புடைய , கல்வி உதவித்தொகையானது தகுதியுள்ள மாணவர்களை நிதிச் சுமையிலிருந்து விடுவிப்பதோடு, அவர்களின் கல்வி அபிலாஷைகளை புதுப்பிக்கப்பட்ட வீரியத்துடன் தொடர அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

"மைக்ரான் அறக்கட்டளை மாணவர்களின் தேவைக்கேற்ப அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதில் அவர்களுக்கு ஆதரவளிக்க உறுதிபூண்டுள்ளது" என்று மைக்ரான் நிர்வாக துணைத் தலைவர், தலைமை மக்கள் அதிகாரி மற்றும் மைக்ரான் அறக்கட்டளையின் தலைவர் ஏப்ரல் அர்ன்சென் கூறினார். "யுஆர்எளம் ஸ்காலர்ஷிப் திட்டம் போன்ற முன்முயற்சிகள் மூலம் வழங்கப்படும் உயர் கல்விக்கான அணுகல் மற்றும் யூ டபிள்யூ எச் போன்ற கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுவது, இந்தியா முழுவதும் உள்ள சமூகங்களில் நீடித்த தாக்கத்தை உருவாக்கும் அதே வேளையில் எதிர்கால தொழில்நுட்ப வாழ்க்கைக்கு அவர்களை தயார்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்." மைக்ரான் இந்தியாவின் துணைத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ஆனந்த் ராமமூர்த்தி கூறுகையில், "எங்கள் யுஆர்எளம் உதவித்தொகை பன்முகத்தன்மையை மேம்படுத்துவதிலும், கல்வியில் சிறந்து விளங்குவதிலும் எங்களின் கவனத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. "இந்தியாவில் உள்ள திறமையின்அடிப்படையில் , இந்த மாணவர்கள் தொழில்நுட்பத் துறையின் மாறும் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப செமிகண்டக்டர் பவர்ஹவுஸாக இந்தியாவின் எழுச்சியின் முன்னணியில் இருப்பார்கள்.

ஹைதராபாத் யுனைடெட் வேயின் தலைமை நிர்வாக அதிகாரி ரேகா சீனிவாசன் கருத்துப்படி, "இந்த யுஆர்எளம் உதவித்தொகை முன்முயற்சியின் மூலம் தகுதியான மாணவர்களை மேம்படுத்த மைக்ரான் அறக்கட்டளையுடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த உதவித்தொகைகள் ஒவ்வொரு மாணவரும் தங்கள் திறனைத் திறக்க, அவர்கள் தேர்ந்தெடுத்த படிப்புகளைத் தொடர மற்றும் அவர்கள் மதிக்கும் ஒரு தொழிலை உருவாக்குவதற்கான வாய்ப்புகளுக்கு சமமான அணுகலை உறுதிசெய்கிறது. இந்த உதவித்தொகை திட்டத்தின் மூலம், அனைத்து மாணவர்களுக்கும் நியாயமான தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

யுஆர்எளம் என்பது இந்தியப் பல்கலைக்கழகங்களுடன் வலுவான கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கான ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பாகும், இது நாட்டின் சில சிறந்த சிந்தனைகளுடன் ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள் மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. அதன் மையத்தில், கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கிய ஆசிரிய வல்லுநர்கள், மேம்பட்ட ஆராய்ச்சி ஆய்வகங்கள், மாணவர் சமூகங்கள், தொழில் சங்கங்கள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களை மேலும் ஆராய்ச்சி, கல்வி மற்றும் நினைவக வடிவமைப்பில் புதுமைகளை உருவாக்க இந்த கூட்டணி ஒன்றிணைக்கிறது.



ஆர்.கே.நகர் 42 வது வடக்கு வட்டத்தில் கழக செய்தி தொடர்பாளர் ஏ.சசிரேகா தலைமையில் ஆர்.கே.நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் எம்.என்.சீனிவாசபாலாஜி, வட்ட செயலாளர் எஸ்.ஆர். அன்பு ஆகியோரது முன்னிலையில் அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தலை வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர், மோர், ரோஸ்மில்க், கரும்பு சாறுகளை வழங்கினார். குரு.மோகன், நாகூர் மீரான், ஏ.கே.சந்திரசேகர், எல்.எஸ்.மகேஷ்குமார், சு.பிரசாத், கே. கிருஷ்ணா, சென்னை பி.கணேசன், மின்னல் மோகன், , பி. பீ. ரமேஷ்ராஜா, வி. துரைபாபு, படக்கடை சுரேஷ், மோகனா, கோகிலா, மற்றும் பகுதி, வட்ட கழக மாவட்ட பிற அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

## டாடா மோட்டார்ஸ் தனது லக்னோ உற்பத்தியகத்தில் இருந்து 9,00,000 வது வாகன வெளியீட்டைக் கொண்டாடுகிறது

சென்னை, 07 மே 2024: இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகன உற்பத்தி நிறுவனமான டாடா மோட்டார்ஸ், அதன் அதிநவீன லக்னோ அமைவிடத்தில் இருந்து 9,00,000வது வாகன வெளியீடு என்னும் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளதை அறிவித்தது. உத்திரபிரதேச அரசின் தலைமைச் செயலாளர் திரு. துர்கா சங்கர் மிஸ்ரா மற்றும் டாடா மோட்டார்ஸின் மூத்த பிரதிநிதிகள் முன்னிலையில் இதற்கான கொடியசைப்பு விழா நடைபெற்றது.

600 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் இந்த லக்னோ அமைவிடம், டாடா மோட்டார்ஸின் நிலையான உற்பத்தி நடைமுறைகளுக்கு அர்ப்பணிப்பிற்கு ஒரு சான்றாக உள்ளது, இது இந்திய தொழில் கூட்டமைப்பு மூலம் நீர்-நேர்மறை ஆலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வசதி 6 மெகாவாட் சூரிய சக்தி ஆலையைக் கொண்டுள்ளது, அதன் கார்பன் தடயத்தைக் கணிசமாகக் குறைக்கிறது. ரோபோடிக் பெயிண்ட் பூத் மற்றும் ரோபோடிக் ஸ்பாட் வெல்டிங்கைக் கொண்ட பாடி-இன்-ஒயிட் ஷாப் போன்ற அதி நவீன வாகன உற்பத்தி நிலையங்களை இந்த வசதி அதிகப்படுத்துகிறது. 1992 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, இந்த வசதி இலகுரக, இடைநிலை, நடுத்தர மற்றும் கனரக வணிக வாகனங்கள், அத்துடன் மின்சார மற்றும் எரிபொருள் செல் மின்சார பேருந்துகள் உள்ளிட்ட சரக்கு மற்றும் பயணிகள் வணிக வாகனங்களை உருவாக்கியுள்ளது.

டாடா மோட்டார்ஸின் லக்னோ உற்பத்தியகத்தில் இருந்து 9,00,000வது வாகன வெளியீட்டு விழாவில் உத்திரப் பிரதேச அரசின் தலைமைச் செயலாளர் திரு. துர்கா சங்கர் மிஸ்ரா அவர்கள், இந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியதற்காக டாடா மோட்டார்ஸை நான் பாராட்டுகிறேன். தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு மேம்பட்ட, பாதுகாப்பான மற்றும் பசுமையான இயக்கத் தீர்வுகளை வழங்குவதில் டாடா மோட்டார்ஸின் முக்கிய பங்கை இந்த சாதனை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மேலும், பெண்களின் அதிகாரமளிப்புக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பு, இந்த ஆண்டு புதிதாக பணியமர்த்தப்பட்டவர்களில் 22% க்கும் அதிகமான பெண்களின் பிரதிநிதித்துவத்தால் எடுத்துக்காட்டுகிறது, இது உற்பத்தித் துறையில் பெண்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது" என்று கூறினார்.

இந்தச் சாதனையைப் பிரதிபலிக்கும் வகையில், டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகனங்களின் துணைத் தலைவரும், இயக்கத் தலைவருமான திரு. விஷால் பாட்ஷா அவர்கள், " எங்கள் 9,00,000 வது வாகனத்தை லக்னோ அமைவிடத்தில் இருந்து வெளியிடுவது டாடா மோட்டார்ஸுக்கு ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். இந்த வசதி அமைவிடம் எங்கள் மேம்பட்ட மின்சார பேருந்துகளின் தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது, மேலும் 1200 யூனிட்டுகளுக்கு மேல் வெற்றிகரமாக விநியோகித்துள்ளது. உத்தரப் பிரதேசம் எங்களின் முக்கிய சந்தைகளில் ஒன்றாக இருந்து வருகிறது, மேலும் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் உத்தரப்பிரதேச அரசின் உத்வேகம் வணிக வாகனங்களின் விற்பனையை அதிகரிப்பதில் முக்கிய உதவியாக உள்ளது. இண்டஸ்ட்ரி 4.0 ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்தி, இந்த வசதி எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான, ஸ்மார்ட் மற்றும் பசுமையான மொபிலிட்டி தீர்வுகளை வழங்கி வருகிறது. இந்த மைல்கல்லைக் கொண்டாடும் வேளையில், எங்கள் வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள் மற்றும் அனைத்து சக ஊழியர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நிகழ்ச்சியில் பேசிய டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகனங்களின் லக்னோ ஆலைத் தலைவர் திரு. மகேஷ் சுகுரு அவர்கள், "லக்னோ உற்பத்தியகத்தில் இருந்து எங்களின் 9,00,000 வது வாகன வெளியீட்டின் சாதனை, சிறந்து மற்றும் புதுமைக்கான எங்கள் அர்ப்பணிப்பின் சான்றாகும். அதிநவீன தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பு மூலம், நாங்கள் எங்கள் செயல்பாடுகளை மேம்படுத்தியுள்ளோம், பணிப்பாய்வுகளை நெறிப்படுத்தியுள்ளோம், மேலும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளைக் கடந்து செயலாற்றும்சிறந்த வாகனங்களை வழங்க எங்கள் உற்பத்தித் தரத்தை உயர்த்தியுள்ளோம்" என்று கூறினார்.

டாடா மோட்டார்ஸ் அதன் லக்னோ அமைவிடத்தில் பாலின உள்ளடக்கம் மற்றும் பெண்கள் அதிகாரம் ஆகியவற்றில் ஒரு அளவுகோலை அமைத்து வருகிறது. தற்போது, பெண்கள் தொழில்நுட்ப பணியாளர்களில் மூன்றில் ஒரு பங்காக உள்ளனர், அனைத்து செயல்பாட்டு மாற்றங்களிலும் தீவிரமாக பங்கேற்கின்றனர் மற்றும் டிரக்குகள் மற்றும் பேருந்துகள் உட்பட பல்வேறு தயாரிப்புகளின் உற்பத்தியில் பரந்த அளவிலான திறன்களை வெளிப்படுத்துகின்றனர். நிறுவனம் தனது பெண் ஊழியர்களின் விரிவான மேம்பாட்டில் ஆழமாக முதலீடு செய்து, அவர்களின் திறன்களை உயர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புப் பயிற்சி மற்றும் பட்டறைகள் மூலம் அவர்களுக்கு கைத்தொழில் அனுபவத்தை வழங்குகிறது. இந்த ஆண்டு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களில் 22% க்கும் அதிகமான பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துவதால், உற்பத்தித் துறையில் பெண்களின் முன்னேற்றத்திற்கான பெருமைக்குரிய ஆதரவாளராக டாடா மோட்டார்ஸ் திகழ்கிறது.

## விண்கலத்தில் ‘திடீர்’ தொழில்நுட்பக் கோளாறு: சுனிதா வில்லியம்ஸ் விண்வெளிப் பயணம் ஒத்திவைப்பு

சென்னை, 07 மே 2024: இந்தியாமார்ட் இன்டெர்மெஷ் லிட். (“இந்தியாமார்ட்” அல்லது “கம்பெனி” என குறிக்கப்படும்) முழு ஆண்டு மற்றும் நான்காம் காலாண்டு, மார்ச் 31, 2024 வரையிலான நிதி முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது.

இந்தியாமார்ட் ரூ.315 கோடி செயல்பாட்டு வருவாய் வெளியிட்டுள்ளது. இது, கடந்த காலாண்டு வருவாயான ரூ.269 கோடியுடன் ஒப்பிடுகையில் 17% வளர்ச்சியைக் குறிக்கும். இதில், இந்தியாமார்ட் இன் தனி வருவாயான ரூ.299 கோடியும் பிசி இன்ஃபோடெக் இன் வருவாயான ரூ.14 கோடியும் அடங்கும். இது முறையே 17% மற்றும் 24% நடப்பாண்டு வளர்ச்சியைக் குறிக்கும்.

நடப்பு காலாண்டில் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தொகை 16% வளர்ச்சி பெற்று ரூ.484 கோடியை எட்டியது. இதில், தனி வருவாயான ரூ.465 கோடியும், பிசி இன்ஃபோடெக் இன் வருவாயான ரூ.18 கோடியும் அடங்கும். இவை முறையே 16% மற்றும் 24% வளர்ச்சியைக் குறிக்கும்.

மார்ச் 31, 2024 வரையிலான ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,440 கோடியாக வளர்ச்சியுற்றது. இது, ஓராண்டின் மீதான 24% வளர்ச்சியைக் குறிக்கும். இதில், முக்கியமாக, இந்தியாமார்ட் இன் தனி ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,395 கோடி மற்றும் பிசி இன்ஃபோடெக் இன் ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.43 கோடி ஆகியவை அடங்கும் இது, முறையே ஓராண்டின் மீதான 23% மற்றும் 59% வளர்ச்சியைக் குறிக்கும்.

காலாண்டுக்கான நிகர லாபம் ரூ100 கோடியாகும். இது, 25% லாபத்தைக் குறிக்கும். காலாண்டுக்கான செயல்பாட்டு பணப்புழக்கம் ரூ.260 கோடியாகும். மார்ச் 31,2024 இல், ரொக்க மற்றும் முதலீட்டு இருப்பு ரூ.2,340 கோடியாக இருந்தது.

தனியான செயல்பாட்டு வருவாய் ரூ.299 கோடியாக வளர்ச்சியுற்றது. கடந்த ஆண்டில் இது ரூ.256 கோடியாக இருந்தது. இது 17% வளர்ச்சியைக் குறிக்கும். வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், செலுத்தும் சப்ளயர்கள் மூலமான 10% வளர்ச்சியும் 6% செலுத்தும் சப்ளையர்களின் எண்ணிக்கை வளர்ச்சியுமாகும்.



காலாண்டில், வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.465 கோடியாகவும் மார்ச் 31, 2024 வரையிலான ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,395 கோடியாகவும் வளர்ச்சியுற்றன. இது, ஓராண்டின் மீதான 23% வளர்ச்சியைக் குறிக்கும்.

காலாண்டில், இபிஐடிடிஏ ரூ.90 கோடியாக இருந்தது. இபிஐடிடிஏ யின் லாப அளவு 30% காலாண்டின் நிகரலாபம் ரூ.92 கோடியாகும். இதன் லாப அளவு 27%

நிதியாண்டு 2024 இன் நான்காம் காலாண்டில் இந்தியாமார்ட் 24 மில்லியன் தனித்துவமான தொழில் விசாரிப்புக்களைப் பெற்றது. இது ஓராண்டின் மீதான 14% வளர்ச்சியைக் குறிக்கும். சப்ளையர்களின் ஸ்டோர்முனைவுகள் 7.9 மில்லியனாக, வளர்ச்சியுற்றது. இது ஓராண்டின் மீதான 5% வளர்ச்சியைக் குறிக்கும். செலுத்தும் சப்ளையர்களின் எண்ணிக்கை 214கே ஆக வளர்ச்சியுற்றது. காலாண்டில் இது, நிகர 3கே வாடிக்கையாளர் சேர்ப்பை உள்ளடக்கும்.

செயல்பாடு குறித்து தலைமை நிர்வாக அதிகாரி, திரு.தினேஷ் அகர்வால் கீழ்க்கண்டவாறு கூறினார்:

நிதியாண்டில் வருவாய், ஒத்திவைக்கப்பட்ட வருவாய், லாபம் மற்றும் பணப்புழக்கத்தில் சீரான வளர்ச்சியை அடைந்துள்ளோம். சிறப்பான பொருள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றை அளிப்பதன் மூலம், தொழில்கள் மேலும் மேலும் ஆன்லைன் வளர்ச்சி பெறுவதை ஊக்குவிப்பதில் எங்கள் தனிக் கவனம் இருக்கும். திடமான செயல்பாட்டு பணப்புழக்கம், எமது மதிப்பூட்டலுக்கு மேலும் வலுசேர்க்க தொடர்ந்த முதலீடுகள் ஆகியவற்றின் மூலம், தொழில்களின் வளர்ந்து வரும் இணையதள பயன்பாட்டு வளர்ச்சியினூடே, தொடர்ந்த லாபகரமான வளர்ச்சியை எட்டுவோம் என நம்புகிறோம்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## ருஷில் டெகார் லிமிடெட் குழுமம், கியூ4எஃப்ஒய்24 நிதி சார்ந்த முடிவுகளையும் ஈவுத்தொகையையும் பரிசீலிக்க மே 09 அன்று கூடவிருக்கிறது

சென்னை, 07 மே 2024: நீடித்து நிலைத்திருக்கும் எம் டி எஃப் மற்றும் லேமினேட்களை வழங்குவதில் முன்னணி நிறுவனமான ருஷில் டெகார் லிமிடெட், 2024-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த நான்காவது காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி சார்ந்த முடிவுகளைப் பரிசீலிக்கவும், ஒப்புதலளிக்கவும், பதிவு செய்யவும், அத்துடன் மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளில் ஈவுத்தொகையைப் பரிந்துரைப்பதற்கான முன்மொழிவைப் பரிசீலிக்கவும் அதன் குழு மே 09, 2024 அன்று கூடும் என்று அறிவித்துள்ளது. முன்னதாக, லேமினேட்ஸ் திட்டத்தைத் தொடங்குதல், வெளிநாட்டுச் சந்தைகளில் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளின் விகிதத்தை உயர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்து மேம்படுத்தும் உத்தியைப் பயன்படுத்தி, நிறுவனம் அடுத்த 3 - 4 ஆண்டுகளில் அதன் ஏற்றுமதியை இரட்டிப்பாக்கி 500 கோடி ரூபாயாக உயர்த்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டது. மேலும், முன்னதாக, "டிசம்பர் மாதத்தில், கர்நாடகா, சிக்மகளூரில் உள்ள நிறுவனத்தின் ஆலை அதன் அதிகபட்ச விற்பனை அளவை எட்டியது மட்டுமின்றி, மிகச் சிறப்பான செயல்பாட்டுத் திறனையும் வெளிப்படுத்தி, திறன் பயன்பாட்டில் 120% ஐத் தாண்டியது. ருஷில் டெகாரின் சுற்றுச்சூழலுக்கு உகந்த எம் டி எஃப் பிரிவு, மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுடன் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டி, இப்போது மதிப்பு அடிப்படையில் 52% ஆக உள்ளது. கியூ4எஃப்ஒய்24-ஐ எதிர்நோக்கியுள்ள நிறுவனம், மேற்கொண்டு இவ்விகிதத்தை 55% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இலக்கு குறிக்கும் அணுகுமுறை, தயாரிப்பு பன்முகப்படுத்தல், மேம்படுத்தப்பட்ட மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றில் அது கொண்டுள்ள அர்ப்பணிப்பை வலுப்படுத்தி, அதன் ஒட்டுமொத்த வெளிப்பாடுகளில் கணிசமான நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது." என்றும் நிறுவனம் குறிப்பிட்டது.

## ஃபேப்லெஸ் செமிகண்டக்டர் ஸ்டார்ட்அப் மைண்ட்க்ரோவ் இந்தியாவின் முதல் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட வணிக உயர்-செயல்திறன் கொண்ட எம் சி யூ சிப்பை அறிமுகப்படுத்துகிறது



சென்னை, 07 மே 2024: பீக் எக்ஸ் வி பார்ட்னர்கள் ஆதரவு கொண்ட ஃபேப்லெஸ் செமிகண்டக்டர் ஸ்டார்ட்அப் நிறுவனமான மைண்ட்க்ரோவ் டெக்னாலஜிஸ், இந்தியாவின் முதல் வணிகரீதியான உயர் செயல்திறன் கொண்ட எஸ் ஓ சி ஐ (சிஸ்டம் ஆன் சிப்) செக்யூர் ஐஓடி என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆர் ஐ எஸ் சி - வி அடிப்படையிலான சிப் இந்தியாவில் உள்ள மூல உபகரண உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளில் ஒரு இந்திய எஸ் ஓ சி ஐப் பயன்படுத்த அனுமதிப்பதுடன் உயர்தர அம்சங்களில் சமரசம் செய்யாமல், அவர்கள் விரும்பும் அம்சங்களுடன் தங்களின் சாதனங்களின் விலையைக் குறைக்க உதவும். இதே பிரிவில் உள்ள மற்ற சில்லுகளை விட இந்த சிப்பின் விலை 30 சதவீதம் குறைவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

செக்யூர் ஐஓடி என்பது 700 எம் எச் இசட் அதிக செயல்திறன் கொண்ட மைக்ரோகண்ட்ரோலர் ஆகும். இது, இந்த பிரிவில் வணிக ரீதியாக கிடைக்கும் ஒரே இந்திய சிப் ஆகும். பரந்த அளவிலான இணைக்கப்பட்ட ஸ்மார்ட் சாதனங்களில் பயன்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நிரலாக்கத்தன்மை, நெகிழ்வுத்தன்மை, பாதுகாப்பு மற்றும் சிறந்த கணினி திறனை ஆகியவற்றை வழங்கும் வகையில் மைண்ட்க்ரோவின் சிப் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சிப் - அணியக்கூடிய ஸ்மார்ட் வாட்ச்கள் முதல் இணைக்கப்பட்ட மின்சாரம், தண்ணீர் மற்றும் கேஸ் மீட்டர் போன்ற ஸ்மார்ட் சிட்டி சாதனங்கள், ஸ்மார்ட் லாக்குகள், ஃபேன்கள், ஸ்பீக்கர்கள் போன்ற இணைக்கப்பட்ட வீட்டு சாதனங்கள், அத்துடன் ஈவி பேட்டரி மேலாண்மை அமைப்புகள், கட்டுப்பாட்டு அமைப்புகள் என அனைத்தையும் கட்டுப்படுத்த முடியும். "உட்பொதிக்கப்பட்ட சிஸ்டம்ஸ் ஸ்பேஸில் உயர்நிலை மற்றும் குறைந்த-நிலையில் உள்ளவர்களுக்கு இடையிலான பரந்த இடைவெளியை உலகப் பரவல் தொற்று வெளிப்படுத்தியது, பிந்தையது சிப்பின் உண்மையான செயல்திறனை விட செலவு மற்றும் அளவிற்கு முன்னுரிமை அளித்தது" என்று மைண்ட்க்ரோவ் டெக்னாலஜிஸின் தலைமை நிர்வாக அதிகாரியும் சி ஓ நிறுவனருமான ஷாஷ்வத் டி ஆர் கூறுகிறார். "எனவே, நாங்கள் நடுத்தர சந்தையை இலக்காகக் கொண்ட சிப்புகளை வடிவமைக்க தொடங்கினோம். மைண்ட்க்ரோவைப் பொறுத்தவரை 'ரைட்-சைஸ்' என்பது முக்கிய வேறுபடுத்தும் காரணியாகும், இது மேம்பட்ட நெகிழ்வுத்தன்மை, தகவமைப்பு, பாதுகாப்பு மற்றும் செலவு-திறனுடன் ஒரு வலுவான ஆதரவு அமைப்புடன் மற்றவர்களை விட ஒரு படி அதிகமாகவே அளிக்கிறது."

இவை சிப்புகளை விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், இந்தியாவில் புதுமையை புகுத்தவும் உற்பத்தி அளவை துரிதப்படுத்தவும் இந்திய பிராண்டுகளுக்கு மைண்ட்க்ரோவ் வடிவமைப்பு ஆதரவை வழங்குகிறது. இது, குறைக்கடத்தி மற்றும் மின்னணுவியல் துறையில் தன்னிறைவு மற்றும் உலகளாவிய நிலைப்பாட்டை நோக்கி ஒரு குறிப்பிடத்தக்க படியாக இருக்கும். இந்த சிப்புகளுக்கான சந்தையைப் பற்றி பேசுகையில், ஷாஷ்வத் மேலும் கூறியதாவது, "இந்தியா ஆண்டுக்கு ஒரு பில்லியனுக்கும் அதிகமான சிப்புகளை பயன்படுத்துகிறது, அவற்றில் 10 முதல் 50 மில்லியன் வரை செக்யூர் ஐ ஓ டி ஆல் மாற்றப்படலாம். மேலும், உலகளவில் மைக்ரோசிப்களுக்கு பரவலான தேவை உள்ளதுடன் உலகளாவிய அளவில் உள்ள நுகர்வோர்கள் இந்தியாவில் இருந்து ஒரு புதிய விருப்பத்தேர்வு கிடைப்பது குறித்து உற்சாகமாக உணர்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என்று அவர் மேலும் கூறினார். ஐ ஐ டி எம் பிரவர்தக் டெக்னாலஜிஸ் ஃபவுண்டேஷன் மற்றும் ஐ ஐ டி மெட்ராஸ் இன்குபேஷன் செல்-ன் இன்குபேடட் ஸ்டார்ட்-அப், சிப் வெற்றிகரமான எம் பி டபிள்யூ டேப்-அவுட்டைப் பெற்றுள்ளதுடன், 28என் எம் முனையில் சிலிக்கான் தொழில்துறைச் சொல்லான முன்மாதிரியை உருவாக்கி உள்ளது, மேலும், வரும் வாரங்களில் ஓ ஈ எம்-கள் முயற்சிக்க அவை தொடர்பான குறிப்பு பலகைகள் கிடைக்கும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

செக்யூர் ஐஓடி, அதிக எண்ணிக்கையிலான ஐ/ஓஎஸ், வன்பொருள் முடுக்கிகளாக செயல்படுத்தப்படும் முக்கிய பாதுகாப்பு வழிமுறைகள், செக்யூரிடி பூட் மற்றும் ஆன்-சிப்-ஒன்-டைம் நிரல்படுத்தக்கூடிய நினைவகம் போன்ற பரந்த அளவிலான அம்சங்களை வழங்குகிறது. இந்த சிப்பை வெற்று உலோகக் குறியீடு அல்லது எந்தவொரு மைக்ரோகண்ட்ரோலர் ஆர் டி ஓ எஸ் (நிகழ்நேர இயக்க முறைமை) உடன் பயன்படுத்தப்பட வேண்டும், இதைக்கொண்டு போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்புகள், தன்னாட்சி வாகனங்கள், மருத்துவ உபகரணங்கள் போன்ற தளங்களைத் திறக்கலாம்.

## சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் நிறுவனம் ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் சான்றளிக்கப்பட்ட சோனா மசூரி நெல் விதைகளின் இலவச விநியோகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது

சென்னை, 07 மே 2024: சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் நிறுவனம், உயர் தரம் மற்றும் மகசூல் திறனுக்குப் பெயர் பெற்ற, சான்றளிக்கப்பட்ட சோனா மசூரி நெல் விதைகளை ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேசம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்து இப்பிராந்தியத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு முன்னோடித் திட்டத்தை அறிவித்துள்ளது. ஏற்றுமதி-சார்ந்த அரிசி வகைகளின் விதைகளை வழங்குவதன் மூலம் விவசாய சமூகத்தை மேம்படுத்துவதை சர்வேஸ்வர் நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சர்வேஷ்வர் கொள்முதல் வசதியளிப்பு மையத்தில் சோனா மசூரி நெல்லின் சான்றளிக்கப்பட்ட விதை இலவச விநியோகம் செய்யப்படும். இந்த முன்முயற்சியானது, உள்ளூர் விவசாயச் சமூகங்களை வலுப்படுத்துவதற்கும், அப்பகுதியில் விவசாய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் சர்வேஷ்வர் ஃபுட்ஸ் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

ஜம்மு & காஷ்மீரில் உள்ள விவசாயிகள் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களின் பின்னணியில், சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் தலைவர் திரு. ரோஹித் குப்தா, காருண்யமுள்ள இம்முன்முயற்சியை அறிவித்துள்ளார். விவசாய நிபுணர் குழுவின் மேற்பார்வையில், நெல் விதைகளை இலவசமாக விநியோகிப்பதென சர்வேஷ்வர் தீர்மானித்துள்ளது. இவ்விநியோகம் குறிப்பாக ஜம்முவின் பாஸ்மதி-அல்லாத பகுதிகளை இலக்காகக் கொண்டதாகும். இத்திட்டத்தின் முதன்மை நோக்கம், மாநிலத்தில் விவசாயிகளின் வளத்திற்கும் நலத்திற்கும் முன்னுரிமை அளித்து அவர்களுக்கு ஆதரவளிப்பதாகும்.

சோனா மசூரி அரிசி தென்னிந்தியாவில் பிரதானமாகப் பயிரிடப்படும் நடுத்தர தானிய வகையாகும். சுவைகள் மற்றும் மசாலாப் பொருட்களை எளிதில் உறிஞ்சும் திறன் கொண்டிருப்பது, சோனா மசூரி அரிசியின் தனித்துவமான அம்சங்களில் ஒன்றாகும். அதன் காரணமாக, இது பலவிதமான இந்திய உணவுவகைகளைத் தயாரிப்பதற்கான சிறந்த மூலப்பொருளாக அமைகிறது. கூடுதலாக, மற்ற அரிசி வகைகளுடன் ஒப்பிடுகையில் இது குறைவான கிளைசெமிக் குறியீட்டைக் கொண்டுள்ளதால், நீரிழிவு கொண்டவர்களுக்கான ஆரோக்கியமான தேர்வாகவும் அமைகிறது. சோனா மசூரி அரிசி, அதிகமாகப் பிரபலமடைந்து வருவதன் காரணமாக, சர்வதேச சந்தையிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று, அது பெரும்பாலும் புலம்பெயர்ந்த இந்தியர்கள் வசிக்கும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பரக்வால், மீர்புர், கர்கல், அக்னூர் கிழக்கு, பஞ்ச்தூட், கௌர், ஜௌரியன், பாகௌர், அக்னூர் மேற்கில் உள்ள ஹமீர்புர் மற்றும் கதுவா செக்டரில் உள்ள பஹர்புர், மஹராஜ்புர், ஹரிபுர், சத்வால், ஹரியாசக் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள சுமார் 1000 விவசாயிகளுக்கு இவ்விநியோகம் பயனளிக்கும். இப்பகுதிகளை இலக்காகக் கொண்டு, சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் தனது முயற்சியை அதிகபட்ச அளவில் விஸ்தரிப்பதையும், தேவையுள்ள விவசாயிகள் தங்கள் விவசாயத் திட்டங்களுக்கு அத்தியாவசிய ஆதரவைப் பெறுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் சான்றளிக்கப்பட்ட சோனா மசூரி நெல் விதைகளை இலவசமாக விநியோகிக்கும் சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன்முயற்சியானது, இப்பிராந்தியத்தில் விவசாயம் சார்ந்த நிலைத்தன்மையையும் கிராமப்புற வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க செயல்பாடாக விளங்குகிறது. சர்வேஷ்வர் ஃபுட்ஸ் நிறுவனம் தனது நிபுணத்துவம் மற்றும் வளஆதாரங்களைப் பயன்படுத்தி, உள்ளூர் விவசாயிகளுக்கு ஆதரவளிப்பது மட்டுமின்றி, அப்பகுதியில் உணவுப்பொருள் பாதுகாப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும்கூடப் பங்காற்றுகிறது.

## 'பால் பண்ணை கடன் திட்டம்' குறித்து தவறான தகவலை அகற்ற நபார்டு வெளியிடும் அறிக்கை

சென்னை, 07 மே 2024: நபார்டு பால் பண்ணை கடன் திட்டம் குறித்து சமீபத்தில் வெளியான தகவல் குறித்து உண்மை நிலையை விளக்குவதற்காக விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்ட்), ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. பால் பண்ணை தொழில்முனைவு வளர்ச்சி திட்டத்தின் கீழ், பால் பண்ணை தொழில் முயற்சிகளுக்காக விவசாயிகளுக்கு நபார்டு நிறுவனம் நேரடியாக கடன்களை வழங்குகிறது என்று தொடர்ச்சியாக பொய்யான தகவல்கள் சமீபத்தில் பரப்பப்பட்டு வருகின்றன. இந்த கூற்றுகள் அனைத்தும் போலியானவை அவற்றில் உண்மையில்லை என்று இந்த அறிக்கையின் மூலம் நபார்டு திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கிறது. வளர்ச்சிக்கான தலைமை நிதி அமைப்பாக இயங்கி வரும் நபார்டு, ஊரக வளர்ச்சிப் பணியில் ஈடுபடுகின்ற பல்வேறு நிதிசார் அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் / வங்கிகளுக்கு நிதிசார் உதவியையும், ஆதரவையும் வழங்கி வருகிறது. தனிநபர் விவசாயிகளுக்கு நேரடியாக கடன்கள் அல்லது நிதித்திட்டங்கள் எதையும் அது வழங்குவதில்லை. நபார்டு, விவசாயிகளுக்கு நேரடியாக கடன் வழங்குகிறது என்று கூறப்படும் பொய்யான தகவலை நம்ப வேண்டாம் அல்லது அதனை பரப்ப வேண்டாம் என்று குறிப்பாக விவசாயிகள் மற்றும் ஊரக தொழில்முனைவோர்களை நபார்டு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இத்தகைய தவறான தகவல்கள் குறித்து அதிக எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்று அது கேட்டுக்கொள்கிறது. உறுதி செய்யப்படாத, தவறான இதுபோன்ற தகவல், நிதி மோசடி இடர்வாய்ப்புக்கும் மற்றும் தவறான புரிதலுக்கும் வழிவகுத்து விடும் என்று எச்சரிக்கும் நபார்டு, தனது திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த துல்லியமான தகவல்கள் நபார்டு-ன் அதிகாரப்பூர்வ வலைதளமான www.nabard.org <http://www.nabard.org>-ல் கிடைக்கப்பெறுகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. நிலைப்புத்தன்மையுள்ள வாழ்வாதாரத்தை ஆதரித்துப் பேணுவதை இலக்காகக் கொண்டு பல்வேறு முன்னெடுப்புகள் மற்றும் செயல்திட்டங்கள் வழியாக, ஊரக வளர்ச்சியையும், விவசாயத்தையும் ஊக்குவிப்பதில் தான் கொண்டிருக்கும் பொறுப்புறுதியிலும், அர்ப்பணிப்பிலும் நபார்டு தொடர்ந்து உறுதியாக இருக்கிறது. ஆகவே, நபார்டு-ன் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து தவறான தகவல்களை நம்ப வேண்டாம் என்று இந்த அறிக்கை வலியுறுத்துகிறது; துல்லியமான, உண்மையான தகவல்கள் மக்களை சென்றடைவதை உறுதி செய்வதற்கு தொடர்புடைய அனைத்து நபர்களின் ஒத்துழைப்பையும் நபார்டு கோருகிறது. இது தொடர்பாக மேலதிக விளக்கம் அல்லது விசாரணைகளுக்கு நபார்டு அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொள்ளவும் அல்லது உங்களுக்கு அருகிலுள்ள எமது அலுவலகத்திற்கு நேரில் வருகை தரவும்.